## விழுப்புரம் நகராட்சி ஆணையரின் செயல்முறைகள்
## முன்னிலை:- திரு.H.இரமேஷ், பி.எல்.,

ந.க.எண்.291/2024/F1 நாள்.05/04/2024

பொருள் : மனைப்பிரிவு – விழுப்புரம் நகராட்சி – விழுப்புரம் கிராமம், சர்வே எண்.71, 72, 74/2, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 (பழைய சர்வே எண்.384/3, 385/1, 385/2–ல் 0.52 ஏக்கர் அல்லது 2116 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.5Y2L4LOP/2023TCP , நாள்.14.12.2023
2. நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரம் எண்.3809/2023 , நாள்.06.12.2023
3. நகராட்சி பொறியாளர், விழுப்புரம் அவர்களின் குறிப்பு நாள்:18.10.2023 மற்றும் 24.11.2023
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கேட்பு அறிவிப்பு நாள்.13.03.2024
5. திரு.A.பழனி, எண்.1, ஆறுமுகம் லே அவுட், முதல் தெரு, கே.கே.ரோடு, விழுப்புரம் என்பவரின் மனு நாள்.27.03.2024 மற்றும் 28.03.2024
6. இந்நகர் மன்ற தீர்மான எண்.481, நாள்13.03.2024

*****

**உத்திரவு:-**

பார்வை 1–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் கடிதத்தில் விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட விழுப்புரம் **கிராமம், சர்வே எண்.71, 72, 74/2, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 (பழைய சர்வே எண்.384/3, 385/1, 385/2–ல் 0.52 ஏக்கர் அல்லது 2116 ச.மீ** பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ/வி.உ.தி.கு எண்.04/2023 என எண்ணிடப்பட்டு இணைப்பிலுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காணும் மனுதாரரின் தானமாக வழங்கப்பட்ட தானப்பத்திரத்தில் மனைபிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடி சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண்.3809/2023 நாள்.06.12.2023–ல் ஒப்படைக்கப்பட்டு அசல் தானப்பத்திரம் பெறப்பட்டது. சிறப்பு நிபந்தனை எண்.3–ல் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையின்படி உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை விழுப்புரம் நகராட்சியின் பெயருக்கு வருவாய் ஆவணங்களில் நில உரிமை மாற்றி வார்டு– பி, பிளாக்–7 நகரளவை எண்–72/2, 198/2, 199/2, 204/2, 204/4 என்ற எண்ணிடப்பட்டு உட்பிரிவு (நாள்.04.04.2024) செய்தும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் காணும் நகராட்சி பொறியாளர் அவர்களின் குறிப்பின்படி மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளுக்கான மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு மற்றும் பாதாள சாக்கடை குழாய் வசதிகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதார் அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்ட புகைப்படம் இணைத்துள்ளார். மேலும் பார்வை 4-ல் காணும் இவ்வலுவலக கோப்பு அறிவிப்பின்படி மனதாரர் மனைப்பிரவு அனுமதிக் கட்டணமாக ரூ.69,000/- மற்றும் மனைப்பிரிவு வைப்புத்தொகை ரூ.1,00,000/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு இரசீது எண்.0027747, நாள்.28.03.2024 இணைத்துள்ளார்.

மேற்படி நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், விழுப்புரம் அவர்களின் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்திற்கு நிபந்தனைகளுக்குட்பட்ட இறுதி ஒப்புதல் வழங்கவும் மற்றும் மேற்படி மனை பிரிவுவரைபடத்தில் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுளள சாலைகள் 470.55 ச.மீ மற்றும் உள்ளாட்சிக்கு 13.44 ச.மீ நிலங்களை ஏற்கவும் பார்வை 6-ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான 481, நாள்13.03.2024-ல் அனுமதி அளித்துள்ளது.

விழுப்புரம் எல்லைக்குட்பட்ட விழுப்புரம் கிராமம், சர்வே எண்.71, 72, 74/2, 195, 196, 197, 198, 199, 200, 201, 202, 203, 204, 205, 206 (பழைய சர்வே எண்.384/3, 385/1, 385/2-ல் 0.52 ஏக்கர் அல்லது 2116 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு (ம.வ/வி.உ.தி.கு) எண்.04/2023) பார்வை 1-ல் காணும் கடிதத்தில் விதித்துள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
விழுப்புரம் நகராட்சி.

இணைப்பு: மனைப்பிரிவு வரைபடம்-1.

பெறுநர்:

திரு.A.பழனி,
எண்.1, ஆறுமுகம் லே அவுட்,,
முதல் தெரு, கே.கே.ரோடு, விழுப்புரம்.

நகல்:

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம்.
2. சார்பதிவாளர் இணை -I, சார்பதிவாளர் அலுவலகம், விழுப்புரம்.
3. உதவி பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், விழுப்புரம்.

C:\Users\mc13\Downloads\A.PALANI.docx